# 2009ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 12 பில்லியன் ரூபாவைத் தாண்டிய அந்நியச் செலாவணி பெறுகை

செலான் வங்கியானது 2009ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ரூபா 12.7 பில்லியன் அந்நியச் செலாவணியை கொடுத்துத் தீர்த்துள்ளது.

வங்கிகள், பணப்பரிமாற்று இல்லங்கள் போன்ற நிதி நிறுவனங்கள் ஊடான மணி கிராம், எக்ஸ்பிரஸ் மணி, Instant Cash, SAMBA, Speed Cash, Ez Remit, AFX Fast Remit, SWIFT போன்ற பணப்பரிமாற்றல் சேவைகள் இந்த அடைவுக்கு பங்களிப்பு செய்துள்ளன.

புதிதாக கட்டமைக்கப்பட்டுள்ள செலான் வங்கி மீது வெளிநாடுகளில் வாழும், தொழில்புரியும் இலங்கையர்கள் மற்றும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளவர்கள் கொண்டுள்ள விஸ்வாசம் மற்றும் நம்பிக்கையின் காரணமாகவே அந்நியச் செலாவணியில் இந்தளவுக்கு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக செலான் வங்கியின் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட குறிப்பிட்டார்.

‘‘வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் தாய் நாட்டிலிருக்கும் தமது அன்புக்குரியவர்களுக்கு வசதியான முறையில் செலாவணியை அனுப்பிவைக்கும் நடவடிக்கைக்கு உதவுவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் அதனை கௌரவமாகவும் நினைக்கின்றோம். உள்நாட்டு செலாவணி வர்த்தகத் துறையின் முன்னணி நிறுவனமான செலான் வங்கி, இன்று உலகம் முழுவதுமுள்ள 170 நாடுகளையும் நிலப்பரப்புகளையும் இணைத்துக் கொண்டுள்ளதுடன் சுமார் 128,000 இற்கு மேற்பட்ட சேவை மையங்களையும் விஸ்தரித்துள்ளது. மத்திய கிழக்கு, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, ஐக்கிய அமெரிக்க இராச்சியம் மற்றும் உலகத்தின் ஏனைய பாகங்களில் உள்ள எமது விஸ்வாசமிக்க, அதிகரித்து வரும் வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்வதில் நாம் உண்மையிலேயே பெருமிதம் அடைகின்றோம்’’ என்றும் செலான் வங்கி தலைவர் தெரிவித்தார்.

‘‘உண்மையில், வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர் உழைக்கும் பணத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக நாம் ஒரு முழுமைத்துவமான அணுகுமுறையையே கையாளுகின்றோம். இது இலங்கையின் வெளிநாட்டு நாணய ஒதுக்கு உயர்வதற்கு உதவுவது மட்டுமன்றி, அவர்களில் தங்கி

வாழும் உறவினருக்கு தொந்தரவில்லாத வகையில் செலாவணி கிடைக்கவும் வசதியாக அமைகின் றது'' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வெளிநாட்டில் வாழும் இலங்கையரை அணுகுவதற்காக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்க ளின் வளங்களை செலான் வங்கி சிறப்பாக பயன்படுத்தியுள்ளது. அத்துடன் வங்கியின் இணையத் தளமானது உலகின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் நாளொன்றுக்கு பல்லாயிரக்கணக்கான அடை வுகளைப் பெற்றுக் கொள்கின்றது.

பல்வேறு சமூக ஸ்தாபனங்கள், நலன்புரி அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் வெளி நாடுகளில் வதியும் இலங்கையருக்காக சுதந்திர தினம், சிங்கள - தமிழ் புதுவருடம், வெசாக் பண் டிகை, கலாசார நிகழ்ச்சி போன்ற கிரமமான நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் வெளிநாட்டு அமைப்பு க்கள் போன்றவற்றின் மூலம் செலான் வங்கியானது உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் பெருந்தொகையான இலங்கையரை சென்றடைந்துள்ளது. இலங்கை இசைக் குழுக்களும் கலைஞர்க ளும் தமது திறமையை வெளிக்காட்டும் அதேநேரம் மிகவும் அதிகளவான சனத்திரள் ஒன்றாகக் கூடும் எண்ணற்ற பிரபலமானதும் வரவேற்பைப் பெற்றதுமான இசை நிகழ்ச்சிகளின் பொருட்டு செலான் வங்கியானது மிகவும் சிறப்பாக முன்வந்து செயலாற்றியுள்ளது.

தனிநபரை மையப்படுத்திய பிரசாரங்களின் ஒரு பகுதியாக, செலான் வங்கியின் அதிகாரிகள் வெளி நாடுகளில் தொழில்புரியும் இலங்கையரை ஒரு கிரமமான அடிப்படையில் சந்திப்பதுடன் வங்கியின் பெறுமதி சேர்க்கப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் செலாவணிச் சேவைகள் தொ டர்பாக தெளிவுபடுத்துகின்றனர். வங்கியின் பெறுமதியான வாடிக்கையாளரிடமிருந்து நேரடியாக பின்னூட்டலை பெற்றுக் கொள்வதானது, சாதகமான தாக்கமிக்க சிறந்த தொடர்பாடல் உபாயம் என் பதை இது நிரூபித்துள்ளது.

செலான் வங்கி, மிகவும் விருத்தி செய்யப்பட்ட பல்-வழி சேவை விநியோகங்களுக்கு மேலதிகமாக கொழும்பு 03 செலான் டவர்ஸில் 365 நாட்களிலும் 24 மணித்தியாலங்களும் வங்கிச் சேவைகளை பேணி வருகின்றது. இதன்மூலம் அவசரமான செலாவணிகளை இலங்கையில் உள்ள பயனாளர்கள் தொடர்ச்சியாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.